**காங்கயம் நகராட்சி**

**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் பிலவ வருடம் தமிழ் மாதம் புரட்டாசி 14 ஆம் நாள் ஆங்கில வருடம் 2021 செப்டம்பர் மாதம் 30–ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**திரு.ம.முத்துக்குமார்**
**தனி அலுவலர்**
**காங்கயம் நகராட்சி**

**மன்றப்பொருள்:1**

**ந.க.எண்.902/2021/சி1**

காங்கயம் நகராட்சி ஆணையாளர் திரு.ம.முத்துக்குமார், அவர்களின் செப்டம்பர் 2021–ஆம் மாதத்திற்கான (01.09.2021 முதல் 30.09.2021 வரை) தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1898 , நாள்.30.09.2021**
**தீர்மானம்: பதிவு செய்யப்பட்டது.**

**மன்றப்பொருள்:2**

**ந.க.எண். 1153/2021 /சி1**

அரசாணை எண்.197, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள். 01.09.2021 இல் பணியில் இருக்கும் போது பணியிடை மரணமடையும் பணியாளர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் குழுக்காப்பீட்டுத் திட்ட தொகை ரூ. 3,00,000/- லிருந்து ரூ.5,00,000/- ஆக உயர்வு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி, அரசாணையினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1899 , நாள்.30.09.2021**
**தீர்மானம்: பதிவு செய்யப்பட்டது.**

**மன்றப்பொருள்:3**

**கோப்பு எண் : 1548/2020/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி **2020–21** ன் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகத்தில் உபகரணங்கள் மற்றும் நகராட்சியில் உள்ள R.O Plant பழுதுகள் சரிசெய்யும் பணிக்காக **26.02.2021–ல்** நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.எஸ்.சுப்பையா மதிப்பீட்டை விட +0.10 % அதிகம்
2. திரு.ஆர்.வடிவேல் மதிப்பீட்டை விட +0.50 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:** பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.எஸ்.சுப்பையா அவர்களின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1900 , நாள்.30.09.2021**
**தீர்மானம்: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**மன்றப்பொருள்:4**

**கோப்பு எண் : 0149/2021/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி **2020–21** ன் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சி FSTP சைட்டில் Operation and maintanance பணி மேற்கொள்ளுதல் பணிக்காக **26.02.2021–ல்** நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட -0.10 % குறைவு
2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட +1.20 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:** பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட -0.10 % குறைவான விலைவிதிகதம் கொடுத்துள்ள திருவாளர். வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1901 , நாள்.30.09.2021**
**தீர்மானம்: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**மன்றப்பொருள்:5**

**கோப்பு எண்: 1116 /2021/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட கோவை ரோடு ஏ.சி நகர் பகுதியில் வடிகால் வசதிகள் இல்லை. இதனால் இப்பகுதியிலிருந்து வெளியேறும் கழிவுநீர் இங்கேயே தேங்கி சுகாதார கேடு ஏற்படும் நிலையுள்ளதால் இப்பகுதிக்கு வடிகால் வசதிகள் செய்து தரக்கோரி இப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். இதற்கு ஏ.சி நகர் பகுதியிலுள்ள பங்களாபுதுார் ரோடு வரை வடிகால் அமைக்கப்பட வேண்டியுள்ளது. இப்பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 26.00 இலட்சத்திற்கு (ரூபாய் இருபத்து ஆறு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட மதிப்பீட்டு தொகைக்கு நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர் , திருப்பூர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1902 , நாள்.30.09.2021**
**தீர்மானம்: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**மன்றப்பொருள்:6**

**ந.க.எண்.1112/2021/இ1**

2021–2022 ஆம் ஆண்டிற்கான ஒப்பந்ததாரர்களுடைய வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகையாக 2017–2018 ஆம் ஆண்டு வரை கொண்டு செல்லப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் அஸ்விகா கன்ஸ்ட்ரக்சன்ஸ் 2017–2018 ஆம் ஆண்டில் செலுத்திய வைப்பு தொகையினை திரும்பி தருமாறு விண்ணப்பித்துள்ளார். கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி அஸ்விகா கன்ஸ்ட்ரக்சன்ஸ் நிறுவனத்தினருக்கு காலங்கடந்த வைப்பு தொகை இருப்பில் உள்ளது.

| வரிசை எண் | வருடம் | பதிவேடு பக்கம் எண் | பதிவேடு வரிசை எண் | ரசீது எண்/CJV எண் | நாள் | இருப்பில் உள்ள வைப்பு தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2017–2018 | 66 | 64 | 311528 | 1.12.2017 | 200000 |

மேற்படி ஒப்பந்ததாரர் அஸ்விகா கன்ஸ்ட்ரக்சன்ஸ் நிறுவனத்தாரரின் இருப்பில் உள்ள காலங்கடந்த வைப்பு தொகை ரூ.200000/– வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண். 1903 , நாள்.30.09.2021**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள்:7**

**கோப்பு எண்: 1040 /2021/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பங்களாபுதூர் பகுதியில் குழாய் விஸ்தரிப்பு செய்து உப்புத் தண்ணீர் வழங்குமாறு அப்பகுதி மக்கள் விண்ணப்பித்துள்ளனர். இப்பகுதியில் ஏற்கனவே உள்ள சிறுமின்விசைப்பம்பு திட்டத்தில் ஒரு தரைமட்ட தொட்டி அமைத்து தண்ணீர் விநியோகம் தரைமட்டத் தொட்டியிலுள்ள குழாய்கள் மூலம் வழங்கப்படுகிறது. இந்த தொட்டியின் மேல்பகுதியில் ஒரு பிவிசி வாட்டர் டேங் அமைத்து குழாய் விஸ்தரிப்பு செய்யலாம். குழாய் விஸ்தரிப்பு செய்து பொதுக்குழாய் அமைத்து தண்ணீர் விநியோகம் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 2.80 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து எண்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை குடிநீர்நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1904 , நாள்.30.09.2021**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள்:8**

**கோப்பு எண். 775 / 2020/ எப்1**

திருப்பூர் மாவட்டம் காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ.சர்வே எண். 823/6 -ல் 2.21 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி வேண்டி 1. திரு. எஸ். ராஜாகண்ணன்

த/பெ. சுப்பிரமணியம், 2. திரு. எஸ். சக்திவேல் த/பெ. சென்னியப்ப கவுண்டர் ஆகியோர் 14.07.2020 அன்று விண்ணப்பித்துள்ளனர். மேற்படி விண்ணப்பம் இவ்வலுவலக கடித ந.க எண் 775/2020/எப்1 நாள். 24.07.2020 –ன் வாயிலாக உரிய அனுமதி வேண்டி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்கண்ட மனுதாரரின் உத்தேசத்தை பரிசீலனை செய்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, திருப்பூர் அவர்களின் கடித ந.க எண் 2350/2020/திமா, நாள். 08.10.2020–ல் குடியிருப்பு மனைப்பிரிவின் பொது உபயோகம், மின் பகிர்மானத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் மற்றும் உத்தேச சாலைகளுக்கான அமைப்பு வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அடிப்படை வசதிகள் செய்து உள்ளாட்சிக்கு ஒப்படைக்கவும், மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள TANGEDCO –ற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை தானபத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதற்கான விபரம் மற்றும் அடிப்படை வசதிகள் தரமாக செய்யப்பட்டுள்ளது என்று நகராட்சி பொறியாளரின் சான்றுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிக்கை கோரப்பட்டது. மேலும் மேற்கண்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி 1920–ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 175,176,177,178 மற்றும் 179, மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன் விதி 47(11) –ன் படி அடிப்படை வசதிகள் செய்து தான ஆவணம் மூலம் நகராட்சிக்கு ஒப்படைக்குமாறு மனைப்பிரிவுதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது.

நகராட்சி பொறியாளர் தனது 10.05.2021 –ம் தேதிய அறிக்கை மற்றும் சான்றில் ரீ. சர்வே எண் 823/6 -ல் 2.21 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் அமையும் மனைப்பிரிவில் அமைக்கப்பட்ட சாலைகள் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் நல்ல நிலையில் உள்ளது என்றும் அடிப்படை வசதிகளான மழைநீர் வடிகால்கள், சிறுபாலம், குடிநீர் குழாய்கள் நல்ல நிலையில் அமைக்கப்பட்டுள்ளது எனவும் சான்று வழங்கியுள்ளார்.

காங்கயம் நகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய சாலைகள், பொது உபயோகத்திற்கான இடம் மற்றும் மின்பகிர்மானத்திற்கு (TANGEDCO) ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் ஆகியவை ஆணையாளர், காங்கயம் நகராட்சி அவர்களுக்கு காங்கயம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 5880/2020, நாள் 01.12.2020 மற்றும் காங்கயம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 1897/2021, நாள் 12.03.2021.–ல் (பிழைதிருத்தல் பத்திரம்) மூலம் காங்கயம் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு தானபத்திரம் வாயிலாக மனைப்பிரிவுதாரர்களால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

காங்கயம் நகர்மன்ற தீர்மானம் எண் 1796, நாள்.28.05.2021 –ல் மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு ஆகியவற்றை நகர்மன்றத்தின் பராமரிப்பிற்கு ஏற்றுக்கொள்ள நகர்மன்றம் தீர்மானம்

நிறைவேற்றியுள்ளது. தெருவிளக்குகள் அமைப்பதற்காக நகராட்சி பொறியாளர் அவர்களால் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 2,30,000/- பற்றுச்சீட்டு எண் 158/158/01/21-22/0001762, நாள். 12.05.2021–ல் நகராட்சி கரூவூலத்தில் மனைப்பிரிவுதாரர்களால் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட தொடர் நடவடிக்கைகளைத் தொடர்ந்து காங்கயம் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட ஆவணம் நகல், இந்நகர்மன்ற தீர்மானம் நகல், நகராட்சி பொறியாளர் சான்று மற்றும் தெருவிளக்குகள் அமைக்க செலுத்தப்பட்ட தொகைக்கான இரசீது நகல் ஆகியவற்றை இணைத்து இவ்வலுவலக கடிதம் ந.க எண் 775/2020/எப்1, நாள்: 03.06.2021–ன் வாயிலாக மேல் நடவடிக்கைகாக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க எண். 2350/2020/திமா நாள். 07.07.2021–ல் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ (தி.மா) எண் 157/2021 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் செலுத்த வேண்டிய தொகைக்கான கேட்பு இவ்வலுவலக அறிவிப்பு ந.க எண் 775/2020/எப்1, நாள்: 27.09.2021–ன் வாயிலாக மனைப்பிரிவுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 1. கூர்ந்தாய்வுக் கட்டணம் – ரூ.13430/–, 2. மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் – ரூ. 30000/-, 3. அபிவிருத்திக் கட்டணம் 53700/-,காலிமனை வரிக்கான தோராய தொகை ரூ.10626/- நிலப்பயன்மாற்ற பரிசீலனைக் கட்டணம் ரூ.1000/– ஆகியவை பற்றுச்சீட்டு எண் 158/158/01/21-22/0009163, 158/158/01/21-22/0009164, மற்றும் 158/158/01/21-22/0009165 நாள் 28.09.2021 –ன் வாயிலாக நகராட்சி கரூவூலத்தில் மனைப்பிரிவுதாரர்களால் செலுத்தப்பட்டுள்ளது. அரசாணை எண்.79, வீட்டு வசதி வாரியம் மற்றும் நகர்ப்புறவளர்ச்சி (நவ 4(3)) துறை, நாள் 04.05.2017 –ன் படி நிலப்பயன்மாற்ற கட்டணமாக ரூ.31200/– காங்கயம் சார் நிலைக் கரூவூலத்தில் செலுத்துச் சீட்டு எண்.012, நாள். 28.09.2021 வாயிலாக மனைப்பிரிவுதாரர்களால் செலுத்தப்பட்டுள்ளது.

1. திரு. எஸ். ராஜாகண்ணன் த/பெ. சுப்பிரமணியம், 2. திரு.எஸ். சக்திவேல் த/பெ. சென்னியப்ப கவுண்டர் ஆகியோர் தங்களது 27.09.2021 தேதிய மனுவில் மனைப்பிரிவின் ஊடே செல்லும் குறைந்த மின் அழுத்த மின்பாதையை மாற்றி அமைத்து விட்டதாகவும் எனவே மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

எனவே, காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ. சர்வே எண் 823/6 -ல் 2.21 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1905 , நாள்.30.09.2021**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள்:9**

**கோப்பு எண். 1046 / 2019/ எப்1**

திருப்பூர் மாவட்டம் காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ.சர்வே எண்.100/1A -ல் 2.43 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி வேண்டி திரு. N.S.N. நடராஜ் த/பெ. சாமியப்ப கவுண்டர் என்பவர் 09.07.2019 அன்று விண்ணப்பித்துள்ளார். மேற்படி விண்ணப்பம் இவ்வலுவலக கடித ந.க எண் 1046/2019/எப்1 நாள். 30.07.2019 –ன் வாயிலாக உரிய அனுமதி வேண்டி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்கண்ட மனுதாரரின் உத்தேசத்தை பரிசீலனை செய்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, திருப்பூர் அவர்களின் கடித ந.க எண் 1701/2019/திம 1, நாள். 09.03.2020–ல் குடியிருப்பு மனைப்பிரிவின் பொது உபயோகம், மின் பகிர்மானத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் மற்றும் உத்தேச சாலைகளுக்கான அமைப்பு வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அடிப்படை வசதிகள் செய்து உள்ளாட்சிக்கு ஒப்படைக்கவும், மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள TANGEDCO –ற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதற்கான விபரம் மற்றும் அடிப்படை வசதிகள் தரமாக செய்யப்பட்டுள்ளது என்று நகராட்சி பொறியாளரின் சான்றுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிக்கை கோரப்பட்டது. மேலும் மேற்கண்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி 1920–ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 175,176,177,178 மற்றும் 179, மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன் விதி 47(11) –ன் படி அடிப்படை வசதிகள் செய்து தான ஆவணம் மூலம் நகராட்சிக்கு ஒப்படைக்குமாறு மனைப்பிரிவுதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது.

நகராட்சி பொறியாளர் தனது 23.08.2021 –ம் தேதிய அறிக்கை மற்றும் **24.08.2021** –ஆம் தேதிய சான்றில் ரீ.சர்வே எண். 100/1A -ல் 2.43 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் அமையும் மனைப்பிரிவில் அமைக்கப்பட்ட சாலைகள் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் நல்ல நிலையில் உள்ளது என்றும் அடிப்படை வசதிகளான மழைநீர் வடிகால்கள், சிறுபாலம், குடிநீர் குழாய்கள் நல்ல நிலையில் அமைக்கப்பட்டுள்ளது எனவும் சான்று வழங்கியுள்ளார்.

மின்பகிர்மானத்திற்கு (TANGEDCO) ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் காங்கயம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண் 3702/2021, நாள் 07.07.2021 –ன் மூலம் மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், பல்லடம் மின் பகிர்மான வட்டம் அவர்களுக்கு தானபத்திரம் வாயிலாக மனைப்பிரிவுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. காங்கயம் நகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய சாலைகள் மற்றும் பொது உபயோகத்திற்கான இடம் ஆகியவை காங்கயம் சார் பதிவாளர் அலுவலக ஆவணம் எண் 3701/2021 நாள் 07.07.2021 –ன் மூலம் ஆணையாளர், காங்கயம் நகராட்சி அவர்களுக்கு தானப்பத்திரம் வாயிலாக மனைப்பிரிவுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள் அமைப்பதற்காக நகராட்சி பொறியாளர் அவர்களால் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.3,10,000/- பற்றுச்சீட்டு எண் 158/158/01/21-22/0004683, நாள். 24.08.2021–ல் நகராட்சி கருவூலத்தில் மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட தொடர் நடவடிக்கைகளைத் தொடர்ந்து காங்கயம் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட ஆவணம் நகல், நகராட்சி பொறியாளர் சான்று ஆகியவற்றை இணைத்து இவ்வலுவலக கடிதம் ந.க எண் 1046/2019/எப்1, நாள்: 24.08.2021–ன் வாயிலாக மேல் நடவடிக்கைகாக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.கஎண்.1701/2019/திமா, நாள்.13.09.2021–ல் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ (தி.மா) எண் 230/2021 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் செலுத்த வேண்டிய தொகைக்கான கேட்பு இவ்வலுவலக அறிவிப்பு ந.க எண் 1046/2019/எப்1, நாள்: 28.09.2021–ன் வாயிலாக மனைப்பிரிவுதாருக்கு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 1. கூர்ந்தாய்வுக் கட்டணம் – ரூ.14780/–, 2. மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் –ரூ.30000/-, 3. அபிவிருத்திக் கட்டணம் 59100/-,காலிமனை வரிக்கான தோராய தொகை ரூ.15866/- நிலப்பயன்மாற்ற பரிசீலனைக் கட்டணம் ரூ.1000/- ஆகியவை

பற்றுச்சீட்டு எண் 158/158/01/21-22/0009223, 158/158/01/21-22/0009224, மற்றும் 158/158/01/21-22/0009225 நாள் 28.09.2021 –ன் வாயிலாக நகராட்சி கரூவூலத்தில் மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. அரசாணை எண்.79, வீட்டு வசதி வாரியம் மற்றும் நகர்ப்புறவளர்ச்சி (நவ 4(3)) துறை, நாள் 04.05.2017 –ன் படி நிலப்பயன்மாற்ற கட்டணமாக ரூ.49000/– காங்கயம் சார் நிலைக் கரூவூலத்தில் செலுத்துச் சீட்டு எண்.015, நாள். 28.09.2021 வாயிலாக மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

திரு. N.S.N. நடராஜ் த/பெ. சாமியப்ப கவுண்டர் என்பவர் தங்களது 28.09.2021 தேதிய மனுவில் மனைப்பிரிவிற்கு செலுத்த வேண்டிய தொகையை அனைத்தும் செலுத்தி விட்டதாகவும் எனவே மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே, காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ. சர்வே எண் 100/1A -ல் 2.43 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண். 1906 , நாள்.30.09.2021**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள்:10**

**கோப்புஎண்.2071/2016/அ2**

காங்கயம் பேருந்து நிலைய நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் **01.10.2019** முதல் **30.09.2020** வரை மூன்றாண்டுகளுக்கு திரு.நீலகண்டன் என்பவர் ஏலம் எடுத்துள்ளார், மேற்படி ஏலதாரார் **01.10.2019** முதல் **30.09.2020** மற்றும் **01.10.2020** முதல் **30.09.2021** ஆகிய காலத்திற்கு இவர் செலுத்த வேண்டிய குத்தகை தொகையினை கொரோனா தொற்று காரணமாக செலுத்த மறுத்து வருகிறார். எனவே இவர் செலுத்த வேண்டிய குத்தகை தொகை நிலுவையின்றி வசூலிக்கும் பொருட்டு நகராட்சி நிலை சட்ட ஆலோசகர் மூலம் வழக்கு தொடர்ந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கவும், இதற்கு ஏற்படும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண். 1907 , நாள்.30.09.2021**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

ஒம்/—ம.முத்துக்குமார்,
ஆணையாளர் மற்றும் தனி
அலுவலர்,
காங்கயம் நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
காங்கயம் நகராட்சி.